Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, 16 AUGUST 2024

வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 16, 2024 | ஒளி: 10 கதிர் 030 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



## 2,85,000 ரூபாவுக்கு மாம்பழம் ஏலம்

வவுனியா உக்குளங்குளம் ஸ்ரீ சித்த விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது மாம்பழம் ஒன்று 2,85,000 ரூபாய்க்கு ஏலம் போனது. உற்சவத்தின் ஆறாம் நாளான புதன்கிழமை (14) இரவு ஏலம் நடைபெற்றது.









### 2024 ஜனாதிபதித் தேர்தலில்

# சூறாவளி பிரசாரம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் வேட்பு மனுக்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை, தேர்தல்கள் ஆணைக்குழுவில், வியாழக்கிழமை (15) காலை 9 மணிமுதல் 11 மணிவரையிலும் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கான வாக்களிப்பு செப்டெம்பர் 21ஆம் திகதி காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறும். அதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. இந்நிலையில், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த கையுடன், வெளியேறிய பிரதான வேட்பாளர்கள், தேர்தல்கள் ஆணைக்குழுவின் வளாகத்திலேயே தேர்தல் பிரசாரங்களை உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்தனர்.


சுயேச்சையாகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தனது ஆதரவாளர்கள் மத்தியில் வெற்றிக்கான ஆணையைக் கோரிநின்றார். அங்கிருந்தவர்கள் வெற்றிக் கோஷம் எழுப்பி ஆதரவளித்தனர். அதன்பின்னர், கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டார். மல்வத்து மாநாயக்க, அஸ்கிரிய மாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாசவும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் வளாகத்தில் தன்னுடைய ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார். வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்ட அவருக்கு அவரது ஆதரவாளர்களும் வெற்றிக் கோஷம் எழுப்பினர்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் எம்.பியுமான நாமல் ராஜபக்ஷவும் பிரசாரத்தை ஆரம்பித்தார். அத்துடன், அநுராதபுரத்துக்குச் சென்று வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திஸாநாயக்க, வேட்பு மனுவைத் தாக்கல் செய்ததன் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் வளாகத்தில் பிரசாரங்களைச் செய்யவில்லை. எனினும், அந்த கட்சியின் பிரசார நடவடிக்கைகள், தென்பகுதியில் இருந்து ஆரம்பமாகுமென ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. மீரிகம கந்தன்கமுவ ஸ்ரீ வித்யாவாச பிரிவென் விகாரையில் வெள்ளிக்கிழமை (16) முற்பகல் 9.30 மணிக்கு

ராமக்ஞ மகா நிக்காயவின் மகாநாயக்க சங்கைக்குரிய மக்குலேவே விமல நாயக்கதேரரை சந்திக்கவுள்ளார். கண்டியில் மல்வத்து மற்றும் அஸ்கிரி பீடங்களின் மகாநாயக்கதேரர்களை

பிற்பகல் 3.00 மணிக்குச் சந்திக்கவுள்ளார் என குறிப்பிட்டுள்ளது.









## சின்னங்களின் விபரங்கள்

செப்டெம்பர் 21 ஆம் திகதியன்று நடைபெறவுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட 9ஆவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர்களுக்குச் சின்னங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சமையல் எரிவாயு சின்னமாக வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## மடு அன்னையின் திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெற்றது

எஸ்.ஆர்.லெம்பேட்

மடு அன்னையின் ஆவணித் திருவிழா திருப்பலி வியாழக்கிழமை (14) காலை 6.15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## சஜித்துடன் ரிஷாட் ஒப்பந்தம்



ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளித்துள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன், அவருடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில், வியாழக்கிழமை (15) கைச்சாத்திட்டார்.

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

## மலையக தமிழர் சமூகம் உப குழு



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 08 முக்கிய கருப்பொருள்களை கொண்டு அமைத்துள்ள உபகுழுவில் மலையக தமிழர்களுக்கு நிலவும் மனித உரிமைகள் சார் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மலையக தமிழர் சமூகம் என்ற உப குழுவையும் அமைத்துள்ளது.

இது இலங்கை வரலாற்றில் முதன் முதலாக மலையக மக்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள்

தொடர்ச்சி P2

## "நொண்டி குதிரையுடன் கூட்டு சேர்ந்த கண்டி கழுதை"



வேலுகுமார் செய்துள்ள செயல், மிகப் பெரிய வரலாற்றுத் துரோகம் வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. மன்னிக்கக்கூடாது. கண்டி மாவட்ட மக்கள் துணையுடன் இவருக்கு மறக்க முடியாத பாடத்தை நாம் கற்றுத் தருவோம் என ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைமை குழுக்களின் மெய் நிகர் கூட்ட முடிவுகளின்படி, பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார், கட்சி, கூட்டணி பதவிகளிலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் விதமாக வெளியேற்றப்படுகிறார்.

தொடர்ச்சி P2

## ஆடைகளை களைந்து அணைத்த காதலன் கைது

கதிர்காமம் தேசிய பாடசாலையில் தரம் 11இல் கல்வி கற்கும் பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சந்தேகத்தின் பேரில் 19 வயது இளைஞன் ஒருவர் கதிர்காமம் பொலிஸாரால் புதன்கிழமை (14) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## கீதாவுக்கு கோபம்



ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் பெண்களின் பிரதிநிதித்துவம் வழங்கப்படாமை மிகவும் வருத்தமளிக்கும் விடயம் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி கீதா குமாரசிங்க தெரிவித்தார். கொழும்பில் வியாழக்கிழமை(15) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கருத்துரைத்த போதே இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். பாராளுமன்றத்தில் கூட பெண்களுக்கு உரிய இடமும் சமமான இடமும் வழங்கப்பட வேண்டும் என கட்சித் தலைவர்கள் பெருமையுடன் கூறினாலும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## குரங்கு அம்மையால் அவசரநிலை பிரகடனம்

உலக நாடுகளிடையே குரங்கு அம்மை பரவல் அதிகரித்து வரும் நிலையில், சர்வதேச பொது சுகாதார அவசர நிலையை உலக சுகாதார அமைப்பு பிறப்பித்துள்ளது.

குரங்கு அம்மை என்பது ஒரு அரிய வகை தொற்று நோய். இந்த நோயை எம்பாக்ஸ் என்று அழைக்கின்றனர். இது மனிதர்களுக்கு இடையே எளிதில் பரவாது. நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்தே மனிதர்களுக்குப் பரவுகிறது. இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டவர்களில், 10இல் ஒருவர் இறக்க வாய்ப்பு உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனாவைப் போல 2022 முதல் பரவத் தொடங்கிய இந்த நோயானது முதலில் ஆபிரிக்க நாடுகளில் பாதிப்பு கண்டறியப்பட்டது. தற்போது, மெல்ல மெல்ல 100க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவத் தொடங்கியுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் மட்டும் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 517 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில், இந்தாண்டு 160% இந்த நோய் தொற்றின் பரவல் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “நொண்டி குதிரையுடன் கூட்டு சேர்ந்த கண்டி கழுதை”

என் உயிரினும் மேலான கண்டி மாவட்ட மக்களுக்கும் நமது கட்சிக்கும், இவர் செய்துள்ள துரோகம் மன்னிக்க முடியாததாகும்.

கண்டி மாவட்டத்தில் சுமார் 15 வருடங்களாக ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கவில்லை என்ற வரலாற்றுத் தேவையை நிறைவேற்றவே நான், என் சொந்த உயிரையும் பணயம் வைத்து, கடும் போராட்டத்தின் மத்தியில் 2010ஆம் ஆண்டு தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டேன். அந்த தேர்தலில் நான் தோல்வி அடையவில்லை. ஆனால், இனவாத வன்முறையால் எனது வெற்றி தடுத்து நிறுத்தப்பட்டது.

நான் 2010ஆம் ஆண்டு கண்டியில் போட்டியிட்ட போது எனக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறை கண்டி மாவட்ட தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி கண்டி தமிழ் மக்களின் கண்களை அடுத்து வரும் ஆண்டுகளில் திறந்தது. அதையடுத்து நடைபெற்ற தேர்தல்களில் எமது கட்சியின் சார்பில் கண்டியில், வேலுகுமாரை போட்டியிடச் செய்து வெற்றி பெற வைத்தோம்.

இலங்கை அரசியல் கட்சிகளின் வரலாற்றில் நிகழும் இத்தகைய துரோகங்களில், இது முதலாவதும் அல்ல. கடைசியுமாக இருக்கப்போவதும் இல்லை. ஆனால், இவர் இன்று செய்துள்ள செயல், மிகப் பெரிய வரலாற்றுத் துரோகம். எமது அரசாங்கம் வெல்லும். எமது காலமும் வெல்லும். அரசாங்க பலத்துடன் கண்டியில் நாம் நிச்சயம் களம் இறங்குவோம். அப்போது வரலாறு திரும்பும் என்றார்.

# மலையக தமிழர் சமூகம் உப குழு

ஆணைக்குழுவினால் அமைத்துள்ள முதலாவது உப குழு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த உப குழுவின் முதலாவது கூட்டத்தொடர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்தில் ஆணையாளர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் புதன்கிழமை (14) இடம்பெற்றது.

கலந்துரையாடலில் உபகுழுவின் செயலாளர் சட்டத்தரணி கபிலன் வில்லவராஜன்,பணிப்பாளர் நிஹால் சந்திரஸ்ரீ ,இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏனைய ஆணையாளர்களான கலாநிதி கிஹான் குணாதிலக்க , பேராசிரியர் பர்ஹானா ஹனிபா ஆகியோரோடு , ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரிகளோடும் ,மலையக சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இவ் உபகுழுவுக்கு தெரிவுசெய்யப்பட்ட சிவஞானம் பிரபாகரன் ,திருமதி பி.யோகேஸ்வரி .கந்தையா தனபாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தொடரில் ஆணையாளரும் பேராசிரியருமான தை .தனராஜ் குறித்த உப குழு அமைக்கப்பட்டமைக்கான நோக்கத்தினை விபரித்ததுடன் ,தொடர்ந்து மலையக மக்களுக்கு நிலவும் நடைமுறை சார் மனித உரிமை பிரச்சனைகள் தொடர்பிலான கருத்து பரிமாறல்களும் இடம்பெற்றதோடு கலந்துரையாடப்பட்ட குறித்த பிரச்சனைகள் ,உரிமைகள் சார் விடயங்களுக்கு எவ்வாறு தர்க்க ரீதியிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆணைக்குழு கவனம் செலுத்தியது.

மலையகத்தமிழர் உப குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்கள்

1.கந்தையா தனபாலசிங்கம்
2. சிவஞானம் பிரபாகரன்
3.திருமதி பி .யோகேஸ்வரி
4.வைத்தியர் ஜோ-வில்லியம்
5.சட்டத்தரணி சுகுமாரன் விஜயகுமார்
6.நடேசன் சுரேஷ்
7.ஜீவரத்னம் சுரேஷ்குமார்

# மடு அன்னையின் திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெற்றது

சிலாப மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி விமல் சிறி ஜயசூரிய ஆண்டகை தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலி யாக ஒப்புக்கொடுத்துள்ளனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூப பவனியும் அதனை தொடர்ந்து, ஆசியும் இறை மக்களுக்கு வழங்கப்பட்டது.

குறித்த திருவிழா திருப்பலியில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், அருட்தந்தை யர்கள், அருட்சகோதரிகள், அகில இலங்கை கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஸ்தாபகர் அதி வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ்.சந்ரு பெர்னாண்டோ, அரசியல் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சுமார் 7 இலட்சம் வரையிலான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழாவில் நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் கலந்து கொள்ளும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி யாகி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆடைகளை களைந்து அணைத்த காதலன் கைது

சந்தேக நபர் கதிர்காமம் ராஜா மாவத்தையை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. பாடசாலை அதிபரின் முறைப்பாட்டிற்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் ஆறு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

விசாரணையில் 16 வயது சிறுமி, சந்தேக நபரைக் காதலித்து வந்ததையும், அவர் தெட்டகமுகந்த பகுதிக்கு அழைத்துச் சென்று, அங்கு தனது ஆடைகளைக் கழற்றி தன்னை அணைத்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். இருப்பினும் தான் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்படவில்லை என்று சிறுமி கூறியுள்ளார்.

எனினும், மாணவி மருத்துவ பரிசோதனைக்காகக் கதிர்காமம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் சந்தேக நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கீதாவுக்கு கோபம்

ஒரு நாட்டில் பெண் உரிமைகள் தொடர்பில் அனைத்து கட்சித் தலைவர்களும் அதிக அக்கறை காட்ட வேண்டும் என தெரிவித்த இராஜாங்க அமைச்சர், இம்முறை பெண் பிரதிநிதித்துவம் இல்லாத ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் துடுப்பு இல்லாத படகு போன்றது எனவும் தெரிவித்தார்.

# சின்னங்களின் விபரங்கள்

தமிழ் பொது வேட்பாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரனுக்கு சங்கு சின்னம் வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினரான முன்னாள் இராணுவத்தளபதி பீல்மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு லந்தர் சின்னம் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மயில்வாகனம் திலக்ராஜ்க்கு இறகு சின்னம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குரங்கு அம்மையால் அவசரநிலை பிரகடனம்

கடந்த 2022ல் இந்த நோய் பரவத் தொடங்கிய போது, கேரளாவில் மூவருக்கு குரங்கு அம்மை சமீபத்தில் உறுதியானது. இதற்கிடையே, மேற்கு டெல்லியைச் சேர்ந்த 34 வயது நபருக்கு குரங்கு அம்மை நோய் உறுதி செய்யப்பட்டது.

குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டோருக்கு முதலில் காய்ச்சல் ஏற்படும். அதன் பின் உடலில் தடிப்புகள் ஏற்படும். இது, முகத்திலிருந்து உள்ளங்கால் வரை பரவும். தலைவலி, தசை வலி, உடல் சோர்வு உண்டாகும். தொண்டை வலி மற்றும் இருமல் இருக்கும்.

குரங்கு அம்மை பாதிப்பு ஏற்பட்டவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள், உடனடியாக தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த நேரத்தில் மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




### அகில இலங்கை மக்கள் காங்கிரஸின்

# எம்.பிக்கள் மூவர் ஜனாதிபதிக்கு ஆதரவு

இனவாதி என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் குற்றஞ்சாட்டிய சஜித் பிரேமதாசவை அந்தக் கட்சி எந்த அடிப்படையில் ஆதரிக்கிறது என்பது தெரியவில்லை, அந்த முடிவையும் முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சஜித் பிரேமதாசவை ஆதரிக்க முஸ்லிம் காங்கிரஸ் (மு.கா) மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (அ.இ.ம.கா) தலைவர்கள் முடிவு செய்தாலும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் மக்களும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கரத்தை பலப்படுத்தவே முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

2015 ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை ஆதரிக்க ஏற்கெனவே முஸ்லிம்கள் தீர்மானித்திருக்கும் நிலையில் இறுதி நேரத்தில் முஸ்லிம் கட்சித் தலைமைகள் அந்த முடிவை எடுத்தாக தெரிவித்த அவர்கள் இம்முறையும் கட்சித் தலைவர்கள் இறுதி நேரத்தில் தமது முடிவை மாற்றக் கூடும் எனவும் குறிப்பிட்டனர்.

கொழும்பில் வியாழக்கிழமை(15) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.எம்.முஷாரப் ,ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஆகியோரே இதனைத் தெரிவித்தனர்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்கள், சஜித் பிரேமதாஸ இனவாதி என்றும் அவரை ஆதரிக்கக் கூடாது எனவும் கட்சியிலுள்ள பலரும் கோரியும் முதுகெலும்புடன் உறுதியாக முடிவெடுக்கக் கட்சித் தலைமை தவறிவிட்டதாகவும் மக்கள் கருத்தறிந்து முடிவு எடுப்பதாக நாடகமாடியதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம்.முஷர்ரப் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கட்சி சார்பில் தெரிவான 4 எம்.பிகளில் மூவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றனர். கட்சித் தலைவர் ரிசாத் பதியூதீன் மாத்திரம் தான் சஜித்திற்கு ஆதரவான முடிவில் இருக்கிறார்.

யாருக்கு ஆதரவு வழங்குவது என தீர்மானிக்கப் பல கூட்டங்களை அவர் நடத்தினார். அனைவரினதும் கருத்தைப் பெறுவதாக நாடகமாடி ஏற்கெனவே தீர்மானித்தவாறு சஜித் பிரேமாசவிற்கு ஆதரவு என அறிவித்துள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவர் ரவூப் ஹக்கீமும் இவ்வாறே சஜித்திற்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார். ஆனால் அவரால் கட்சியிலுள்ள அனைத்து எம்.பிகளையும் இணைத்து இதனை அறிவிக்க முடியவில்லை.

கடந்த காலங்களில் கட்சித் தலைவர் ரிசாத் பல இடங்களில் ஜனாதிபதிக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டிருந்தார். 225 எம்.பிகளில் ரணில் தான் சிறந்தவர் என்றும் நாட்டை பின்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்றும் அவர் கூறியிருந்தார். இதே வேளை சஜித் ஒரு இனவாதி என்று கட்சியைச் சேர்ந்த அப்துல்லா மஹ்ரூப் கூட பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். சஜித் இனவாதி என்பதற்கு நாமும் சாட்சியாக இருக்கிறோம். கட்சித் தலைவர் ரிசாத் பயங்கரவாதி என அநியாயமாகக் கைதான போது சஜித் தரப்பு அவருக்காகக் குரல் கொடுக்கவில்லை. இந்த நிலையில் தான் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு கிழக்கு மக்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நன்றிக்கடன் செலுத்தத் தயாராகிவிட்டனர். யாரை ஆதரிப்பது என அவர்கள் ஏற்கெனவே முடிவு செய்து விட்டனர். கட்சித் தலைவர்கள் சஜித்தை ஆதரிக்க முடிவு செய்தாலும் அந்தக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கத் தயாராகி விட்டனர் என்றார்.













# தமிழ் மொழித்தின போட்டி அங்குரார்ப்பண விழா

■ வி.ரி.சகாதேவராஜா

அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டிக்கான கல்முனை கல்வி மாவட்ட போட்டி திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் வியாழக்கிழமை (15) நடைபெற்றுள்ளது.

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண விழாவில், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துள்ளா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

மருதங்கேணி கிராமத்தின்

# எல்லைகளை ஆக்கிரமிக்க சதி




யாழ்ப்பாணம் - வடமராட்சிக் கிழக்கின் நிர்வாக தலைமையிடமாக இருக்கும் வரலாற்றுப் பாரம்பரியமிக்க மருதங்கேணி கிராமத்தின் எல்லைகளை ஆக்கிரமிக்கும் சதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு எதிராக மருதங்கேணி மக்களுக்கும் பொது அமைப்புக்களும் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மருதங்கேணி கிராம சேவகர் பிரிவில் (J/428) இருந்து தனி கிராம சேவகர் பிரிவாக தங்களை அடையாளப்படுத்த வேண்டும் என்று வடமராட்சிக் கிழக்கின் தாளையடி கிராம மக்கள் கோரியிருக்கிறார்கள்.

இந்தக் கோரிக்கைக்கு மருதங்கேணி மக்களும், பொது அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தாளையடி மக்களின் தனி உரிமை சார்ந்து அவர்களின் தனிக் கிராமக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், தாளையடி கிராமம் என்பது, கத்தோலிக்க மதத்தினர் வாழும் பகுதியாகும். அதன் நிலப்பரப்பு மிகவும் சிறியது. தற்போது, அங்கு 141 குடும்பங்களே வாழ்ந்து வருகின்றன. ஆனால், தாளையடியை தனிக் கிராமமாக மாற்றும் முயற்சிகளின் போக்கில், மருதங்கேணியின் பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் சதி முயற்சிகளை, வடமராட்சிக் கிழக்கின் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தியும் இன்னும் சில தரப்பினரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

மருதங்கேணி கிராமத்தில் 95 வீதமான மக்கள் சைவ சமயத்தை பின்பற்றுபவர்கள். அவர்களின் கோவில்கள், வளவுகள், வயல்கள், கடற்கரை உள்ளிட்ட பெரும் பகுதிகளையும் ஆக்கிரமித்து தான்தோன்றித்தனமாக எல்லைகளை வரையறுத்து தாளையடியாக அறிவிக்கும் வகையிலான கடிதமொன்றை, வடமராட்சிக் கிழக்கின் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி, யாழ். மாவட்டச் செயலாளருக்கு எழுதியிருக்கின்றார்.

கடந்த ஜூலை மாதம் 07ஆம் திகதி குறித்த கடிதத்தை அவர் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகள் தொடர்பில், மருதங்கேணி மக்களுடன் எந்தவித கலந்துரையாடல்களையும் செய்யாது, இரகசியமான முறையில், பிரதேச செயலாளர் எல்லைகளை வரையறை செய்துள்ளார்.

இந்த சதி முயற்சிக்கு எதிராக மருதங்கேணி மக்கள் வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலகத்தின் முன்னால், தொடர்ச்சியாக இரு நாட்கள் போராட்டங்களை நடத்தினார்கள். அப்போது, பிரதேச செயலாளர், தாளையடி கிராமத்துக்கான எல்லைகளை வரையறுத்துத் தான் எந்தவித கடிதங்களையும் மாவட்டச் செயலாளருக்கு எழுதவில்லை என்று பொய் கூறினார். ஆனால், அவர் எழுதிய கடிதத்தின் பிரதிகளை, மருதங்கேணி மக்கள் அவரிடம் காண்பித்து விளக்கம் கோரிய போது, அவர் எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டார். இந்த அதிகார துஷ்பிரயோகம் பாரம்பரிய சிறப்பு மிக்க மருதங்கேணியின் மீது விடுக்கப்படும் பெரும் அச்சுறுத்தலாகும்.

மருதங்கேணி கிராம எல்லைக்குள், வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலகம், பிரதேச வைத்தியசாலை, பொது விளையாட்டு மைதானம் போன்ற முக்கிய பகுதிகள் உள்ளடங்குகின்றன. ஆனால், தாளையடி கிராமத்துக்கான எல்லையையாக, தான்தோன்றித்தனமாகப் பிரதேச செயலாளர் குறித்துள்ள எல்லைகள் மருதங்கேணிக்குள் இருக்கும் மேற்கண்ட முக்கிய நிறுவனங்கள், மற்றும் பிரதேசங்களையும் தாளையடியாக அறிவிக்கும் நோக்கிலான கபடத்தனத்தை கொண்டிருக்கின்றது.

தாளையடி தனிக் கிராமத்துக்கான எல்லை வரையறை தொடர்பில், மருதங்கேணி மக்களுடன் எந்தவித கலந்துரையாடலும் பிரதேச செயலகத்தினாலோ, எல்லை வரையறை தொடர்பிலான பிரிவினராலோ மேற்கொள்ளப்படவில்லை. மருதங்கேணி மக்களுக்குத் தெரியாமல், மறைமுகமாக மருதங்கேணியின் பெரும் நிலப்பகுதியை அபகரித்து புதிய கிராமமாக அறிவிக்கும் நோக்கமே, பிரதேச செயலாளரிடத்திலும், அவரோடு இணைந்து இவ்வாறான சதி முயற்சிகளில் ஈடுபடுவோரிடத்திலும் காணப்படுகின்றது. இந்த சதி முயற்சிகளை உடனடியாக நிறுத்துமாறு மருதங்கேணி மக்களும், பொது அமைப்புக்களும் வலியுறுத்துகின்றன.

மருதங்கேணி மக்கள் மதசார்பின்மையோடு சமத்துவமும் சகோதரத்துவமும் கொண்ட வாழ்க்கை நெறியைக் கொண்டவர்கள். அவர்களை, தாளையடி கிராமத்து மக்களோடு முரண்பட்டு மோத வைக்கும் வகையிலான சதித் திட்டமும் மருதங்கேணி கிராமத்தின் நிலப்பகுதிகளை அபகரித்து தாளையடியாக அறிவிக்கும் சதித்திட்டத்தின் பின்னால் இருப்பதாக மருதங்கேணி மக்கள் அச்சப்படுகின்றனர். இவ்வாறான சதி நடவடிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் ஆகியோர் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று மருதங்கேணி மக்கள் கோருகிறார்கள்.



# பேருந்து விபத்தில் 19 பேர் காயம்

அனுராதபுரம் - பாதெனிய பிரதான வீதியில் ஸ்ராவஸ்திபுர சந்திக்கு அருகில் சிசு செரிய பேருந்தொன்றுடன் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச்சென்ற பேருந்தொன்று மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு மாணவர்கள் உட்பட 19 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து, ஸ்ராவஸ்திபுர சந்திக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிசு செரிய பேருந்தின் பின்புறம் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



# தேர்தலை புறக்கணிக்க கோரி துண்டுப்பிரசுரம்

■ பு.கஜிந்தன்

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால், புதன்கிழமை (14) அன்று துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களால் துண்டுப்பிரசுரங்களை மக்களுக்கு வழங்கி தமது நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பூரில் இரு பெண்கள் கைது

■ ஏ.எம்.கீத்

திருவண்ணாமலை-சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளி குடியிருப்பு, பாட்டாளிபுரம் பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 42, 54 வயதுடைய இரு பெண்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் தங்க புரம், பள்ளி குடியிருப்பு மற்றும் சின்ன குளம், பாட்டாளிபுரம் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் அவர்களிடமிருந்து 25,000 மில்லி லீட்டர் கோடாவும் 49,250 மில்லி லீட்டர் கசிப்பும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களுடன் கைப்பற்றப்பட்ட கோடா மற்றும் கசிப்பையும் மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர், மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஓட்டோ சாரதி மீது துப்பாக்கிச் சூடு

ஹிக்கடுவை பகுதியில் புதன்கிழமை(14) மாலை T-56 ரக துப்பாக்கியுடன் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், முச்சக்கர வண்டி சாரதி ஒருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், துப்பாக்கிப் பிரயோகம் தவறியதால், சாரதிக்கும் தாக்குதல் நடாத்தியவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து சாரதி தப்பியோடி மறைந்துள்ளதுடன், துப்பாக்கிதாரிகளும் குறித்த பிரதேசத்தை விட்டு தப்பியோடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஹிக்கடுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில், சம்பவ இடத்தில் டி-56 ரக துப்பாக்கி தோட்டா ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




# விமான நிலையத்திலிருந்து புதிய சொகுசு பஸ்

இலங்கை விமான சேவை வரலாற்றில் மிகப்பெரிய பிரச்சினைக்கு தீர்வாக, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து கொழும்பு, புறக்கோட்டை மற்றும் மாகும்புர பல்வகை போக்குவரத்து நிலையத்திற்கு புதிய சொகுசு பஸ் சேவையொன்று (Air Port Terminal Shuttle Service) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்கவினால் வியாழக்கிழமை (15) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு , தனியார் பஸ் நிறுவனம் ஆகியவற்றால் இந்த புதிய பஸ் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த பஸ்கள் கொழும்பு -கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் என தெரியவந்துள்ளது .

இந்த புதிய பஸ் சேவைக்காக, 10 சொகுசு பஸ்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒரு பயணியிடம் இருந்து ஒரு பயணத்திற்கு 3,000 ரூபாய் கட்டணம் அறவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேதங்களை தூண்டிவிடும் வகையில் பிரசாரம் வேண்டாம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு, செப்டெம்பர் 21ஆம் திகதி சனிக்கிழமை, காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரையில் நடைபெறவிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் ஜூலை 26 ஆம் திகதி வெளியிடப்பட்டது. கட்டுப்பணம் செலுத்தல், ஆகஸ்ட் 14ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது அக்காலப்பகுதியில், 40 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 22 பேரும், சுயேச்சையாக 17 பேரும், அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி ஒன்றிலிருந்து ஒருவரும் என மொத்தமாக 40 பேர், கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர் எனினும், 39 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

வேட்பு மனுக்களைப் பொறுப்பேற்கும் நடவடிக்கை, இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும் இடம்பெற்றது. அந்த பகுதியில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது. 39 வேட்பு மனுக்களில் மூன்று மனுக்களுக்கு எதிராக ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவை மூன்றும் நிராகரிக்கப்பட்டன.

39 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்த போதிலும், பிரதான வேட்பாளர்கள் ஒரு சிலர், ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பதற்கு முன்னர் இருந்தே தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தனர். ஏனையோர், ஆகக் குறைந்தது ஒரு கூட்டத்தையும் நடத்தவில்லை. தேர்தலில் போட்டியிடுவது ஜனநாயக உரிமை, எனினும், தாங்களும் போட்டியிட்டோம் என பெயருக்குப் போட்டியிடுவது, தேர்தல் செலவை இரட்டிப்பாக்கும். அந்த செலவு சாதாரண மக்களின் தலையிலேயே வந்து விழும்.

ஆகையால், அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர், ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு, கடுமையான வரையறைகளை விதிக்கவேண்டும். இல்லையேல், பெயருக்கும் புகழுக்கும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். இது வீண் செலவுகளையும் நேரத்தை வீணடிக்கும்.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர், வெற்றிக் கோஷங்களுடன் பிரதான வேட்பாளர்கள் சிலர், பிரசாரங்களை ஆரம்பித்து விட்டனர். சூறாவளி பிரசாரமும் ஆரம்பமாகி விட்டது. அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தங்களுக்குக் கிடைக்கும் வாக்குகளைச் சுரண்டி பார்க்கும் வகையில் சிலர் போட்டியிடுகின்றனர்.

ஆகையால், வேட்பாளர்கள் மீது சேறு பூசும் சொல்லாடல்கள் கையாளக்கூடும். சூறாவளி பிரச்சாரம் சூடு பிடித்திருக்கும், பிரதான கூட்டங்களில் மக்கள் கூட்டம் நிறைந்து இருக்கும். கட்சி தாவுதல்களுக்குக் குறைவே இருக்காது. இவ்வாறான நிலையில், தேர்தல் விஞ்ஞாபனம் முக்கியமானது.

அந்த கொள்கை பிரகடனத்தின் பின்னர், வாக்காளர்கள் ஒரு தீர்மானத்துக்கு வருவார்கள். ஆகையால், நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டங்களைத் தீட்டி, அதை நடைமுறைப்படுத்தவும், புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுத் தரவும் பிரதான வேட்பாளர்கள் முன்வரவேண்டும். அதுமட்டுமன்றி, இன, மத பேதங்களைத் தூண்டிவிடும் வகையில் பிரசாரங்களை முன்னெடுத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

வாழ்க்கையில் வாழ்வதே பெரும் கலை. இதில் நடிப்புக் கூடாது. உண்மையாக வாழ்ந்தால் முதியவர்கள், குழந்தைகள் என பராய வேறுபாடுகள் உள்ளவர்களுடன், பழகிய வண்ணமே இருக்கின்றோம். குழந்தைகளுடன் குழந்தையாக, இளைஞர்களுடன் இளைஞராக, முதியவர்களுடன் முதியவராகச் சிந்தையாலும் நடத்தையாலும் ஒன்றித்து வாழ்வது, அவரவர் திறமையைப் பொறுத்தது. அது, இயல்பாக அமையவேண்டும். எல்லோரும் நம்மவர் வாழ்க்கையின் நுட்பத்தை, இயல்பாகவே புரிந்துகொள்வதற்கு, அனுபவம் வேண்டும் என்கின்றனர்.

சமூகத்துடன் தொடர்புகொள்ளும்போது, பழகும் நபர்களுடன் வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்பவர்களை எல்லோருக்கும் பிடிக்கும். ஒளிவு, மறைவு, கபடம், வஞ்சம் போன்ற குணங்களைக் கொண்டிருப்போரின், வேடம் நீண்ட நாள்கள் நீடிக்காது. இத்தகையவர்களின் தீய எண்ணங்களை, காலப்போக்கில் அனைவரும் புரிந்துகொள்வார்கள்.

குழந்தைகளுடன் குழந்தையாக, இளைஞர்களுடன் இளைஞராக, முதியவர்களுடன் முதியவராகச் சிந்தையாலும் நடத்தையாலும் ஒன்றித்து வாழ்வது, அவரவர் திறமையைப் பொறுத்தது. அது, இயல்பாக அமையவேண்டும். எல்லோரும் நம்மவர் என எண்ணுக.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 13

# இலங்கை அரசியலில் கொடுத்தோர்-கொண்டோர்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போருக்குப் பிந்தைய இலங்கையின் அரசியலை நோக்கும் பலர் தவறவிடுகின்ற சில முக்கியமான பரிமாணங்கள் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். இதில் முதன்மையானது, இலங்கையின் அரசியலில் நிலைபெற்றுள்ள 'கொடுத்தோர்-கொண்டோர்' உறவாகும். இதைப் புரவலர்-வாடிக்கையாளர் உறவு என்றும் அழைப்பதுண்டு. இலங்கையின் அரசியற் செயல்பாட்டில் கொடுத்தோர்-கொண்டோர் உறவுகளின் இருப்பை அங்கீகரிப்பது மற்றும் அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆழமாக நோக்குவதும், அரச-சமூக உறவுகளின் கட்டமைப்பில் இலங்கையில் அரசியல் அதிகாரம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு இன்றியமையாதது. 1930களில் தோன்றிய சமூகநல அரசு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியானது, உலகளாவிய வயது வந்தோருக்கான உரிமையுடன் இணைக்கப்பட்ட பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் விரிவாக்கத்துடன் இப்போதும் கூட இருக்கும் கொண்டோர்-கொடுத்தோர் உறவுகளுக்குப் பெருமளவில் பங்களித்துள்ளது. பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் உருவான உபரியின் மூலம் ஆரம்ப ஆண்டுகளில் ஆதரவளிக்கப்பட்ட நலன்புரி ஆட்சியானது, சுதந்திரத்திற்குப் பின்னரான உடனடி தசாப்தங்களில் சுகாதாரம், கல்வி, உணவு, சமூக உட்கட்டமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் அனைத்து குடிமக்களுக்கும் அரச ஆதரவை வழங்கியது. இது இறுதியில் குடிமக்களிடையே அரசைப் பற்றிய ஒரு சமூகப் பார்வையை உருவாக்கியது. இதன் வழிப்பட்டு சமூக நலன் மற்றும் கருணையின் உச்ச நிறுவனமாக அரசு உள்ளது. இது ஆளும் உயரடுக்கினருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் குடிமக்களுக்கும் இடையேயான ஒரு 'சமூக ஒப்பந்தம்' போன்றது. இந்த கொடுத்தோர்-கொண்டோர் இடையேயான சமூக ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கும், மீண்டும் உறுதிப்படுத்துவதற்கும், அரசியல் வகுப்பினருக்கும், குடிமக்களுக்கும் பாராளுமன்றத் தேர்தல்கள் வழக்கமான இடத்தை வழங்கியுள்ளன.

ஒவ்வொரு தேர்தலிலும், இரண்டு பிரதான கட்சிகளும் போட்டி மனப்பான்மையுடன், வாக்காளர்களுக்கு பொதுவாக உணவு மற்றும் விவசாய மானியங்கள், ஏழைகளுக்கு நிவாரணம், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், பொதுத்துறை வேலைவாய்ப்பு, இலவசக் கல்வி உள்ளிட்ட நலன்புரி நடவடிக்கைகளையும் கிராமப்புற சமூகத்தில் முதலீடுகள் போன்றவற்றையும் உறுதியளித்துள்ளன. கடந்த கால் நூற்றாண்டு காலமாகத் தேர்தல்களில் வெற்றி பெற்ற கூட்டணிகள், விவசாய மானியங்கள், அரசதுறை வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் பொருளாதார மீட்சி போன்ற வாக்குறுதிகளைப் பிரதானமாகக் கொண்டுள்ளன. பொதுவாக வாக்காளர்கள், அரசு ஒரு கருணையுள்ள புரவலரின் பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் மற்றும் அரசியல் வர்க்கம், தேர்தல் பரிசீலனைகளால் தூண்டப்பட்டு, பொதுக் கொள்கையின் முக்கிய வழிகாட்டும் கொள்கையாக வாக்காளர்களுக்கு ஆதரவை வழங்கத் தயாராக உள்ளது. குடந்த அரை நூற்றாண்டு கால இலங்கையின் தேர்தல் அரசியல் என்பது அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள், அரசு, குடிமக்கள், அரசியல் வர்க்கம் மற்றும் வாக்காளர்களுக்கு இடையிலான இந்த கொண்டோர்-கொடுத்தோர் உறவின் மூலம் மத்தியஸ்தம் செய்யப்படுகிறது.

அரசியல் ரீதியாக வாக்காளர் என்ற 'கொண்டோர்' உறவானது, தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் ஆளுகையின் ஒவ்வொரு மட்டத்திலும் செயல்படுகிறது. 1978இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி முறையானது, நிர்வாகத்தின் உயர்மட்ட மட்டத்தில் அரசியல் கொண்டோருக்கான இடத்தை விரிவுபடுத்தியுள்ளது. பல ஜனாதிபதி ஆலோசகர்கள், முடிவெடுக்கும் அல்லது செயல்படுத்தும் செயல்பாட்டில் அவர்களின் பங்கைப் பொருட்படுத்தாமல், ஆளும் கட்சி விசுவாசிகளை மகிழ்விப்பதற்காக, அவர்களுக்கு வேலைவாய்ப்பையும், செல்வாக்கு செலுத்தும் வணிகத்தில் பயனுள்ள இணைப்புகளையும் வழங்குவதற்காக நியமிக்கப்படுகிறார்கள். தொடர்ந்து விரிவடைந்து வரும் அமைச்சர்களின் அமைச்சரவையானது இதற்கான குறி காட்டியாகும். அமைச்சரவையானது கொடுத்தோர்-கொண்டோர் உறவின் அதிகார மையமாக உருவெடுத்துள்ளது. இலங்கையின் மிக உயர்ந்த மற்றும் முன்னணி அரசியல் நிறுவனமாக அமைச்சரவை தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. இதன்மூலம் அரசியல் தொடர்புள்ளோரின் விரைவான மேல்நிலையாக்கமும் செல்வாக்கும் சாத்தியமாகியுள்ளது.

கடந்த காலத்தில், பொது நிறுவனங்கள் இத்தகைய கொண்டோருக்கான தேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய நிறுவன இடமாக இருந்தன, ஆனால் போரின் முடிவைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகமும் அமைச்சரவையும் அரசியல் செல்வாக்குடையோருக்கான இரு பொது நிறுவனங்களாக உருவெடுத்துள்ளன. இதற்கிடையில், அதிகாரத்தைப் பகிர்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறையானது, மையப்படுத்தப்பட்ட அரசியல் செல்வாக்கு வாதம், உறவினர் அனுசரணை, மற்றும் ஊழல் ஆகியவற்றின் நிறுவனமாகவும் உருவெடுத்துள்ளது.

அரசியல் செல்வாக்குவாதம் எதிர்மறையானதா, தவிர்க்கக்கூடியதா அல்லது அவசியமா? இந்தக் கேள்வி போருக்குப் பிந்தைய இன்னும் குறிப்பாகப் பொருளாதார நெருக்கடியில் உள்ள இலங்கைக்கு முக்கியமானது. இலங்கையின் அரசியல் விவாதங்களில், அரசியல் செல்வாக்குள்ளவர்கள் என்ற பிரச்சினையில் இரண்டு முக்கிய அணுகுமுறைகள் உருவாகியுள்ளன. எதிர்க்கட்சியில் உள்ள அரசியல் கட்சிகள், சுயாதீன ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் அரசியல் செல்வாக்குள்ளவர்கள் உருவாவதானது நல்லாட்சியின் நலனுக்கு எதிரானது, அது அரசியலில் ஊழலை நிலைநிறுத்துகிறது, எனவே அது அரசியலிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்ற கருத்தைப் பகிர்ந்து கொள்கின்றன. ஆனால், அதிகாரத்தில் இருப்பவர்கள் வேறுவிதமாக நினைக்கிறார்கள். அவர்கள் அதன் நடைமுறை விளைவுகளையும் பலனளிக்கும் விளைவுகளையும் மதிக்கிறார்கள். அணுகுமுறைகளின் இந்த துருவ முனைப்பில், அரசியல் ஊழலின் ஒரு வடிவமாக அரசியல் செல்வாக்கு வாதம் ஒரு சுழற்சி செயல்முறையாக மாறியுள்ளது, இதில் எதிர்க்கட்சி இன்று அதிகாரத்தில் இருக்கும்போது அதை நடைமுறைப்படுத்தும். அதேபோன்று, இன்றைய ஆளும் கட்சி எதிர்க்கட்சியாக மாறும்போது ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுடன் இணைந்து அனைத்து வகையான அரசியல் ஊழல்களையும் எதிர்க்கும். இது ஜனநாயக அரசியல் செயல்பாட்டில் அரசியல் ஊழலின் இனப்பெருக்க சுழற்சியை உருவாக்குகிறது.

ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பில், அரசியல் கட்சிகள் வழக்கமாக நலன்சார் திருப்திக்கான சேனல்களாகவும், புதிய வகையான சங்கங்களுக்கான அரங்கங்களாகவும், தகவல் தொடர்பு மற்றும் தகவல் நெட்வொர்க்குகளை வழங்குபவர்களாகவும் பார்க்கப்படுகின்றன. ஆதரவு என்பது பெரும்பாலும் ஒரு 'பாரம்பரிய' அரசியல் அணிதிரட்டல் கருவியாகக் கருதப்படுகிறது. 20ஆம் நூற்றாண்டில் அரசு மற்றும் சமூக-பொருளாதார நவீனமயமாக்கலின் விளைவுகளுடன், உலகம் முழுவதும், கொடுத்தோர்-கொண்டோர் உறவுக்கான ஆதரவு குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், சமகால தேசிய அரசியலில் அனுசரணையின் அரசியல் சாயல் குறையவில்லை. உள்ளூர் அனுசரணை அரசியலுக்கும் சர்வதேச பேரிடர் உதவி விநியோகத்திற்கும் இடையிலான தொடர்பும் ஒரு புதிய நிகழ்வாகும். இது போருக்குப் பிந்தைய இலங்கையிலும் முக்கியமான இடத்தைப்பெற்றது.

இருப்பினும், அரசியலில் அனுசரணையின் செயல்பாடுகள் எளிமையான கருவி தேர்தல் அணிதிரட்டலுக்கு அப்பாற்பட்டவை. இலங்கையில், அனுசரணை அமைப்புகளின் பரவலானது, அன்றாடம் ஊழலான நடைமுறைகள் எழும் போது பொதுவாகக் காணப்படும் 'வழக்கம் போல் அரசியல்' அல்லது 'அப்படித்தான் நாம் இருக்கிறோம், நடைமுறை அப்படித்தான் இருக்கிறது' போன்ற அன்றாட வெளிப்பாடுகளில் படம்பிடிக்கப்படுகிறது. இலங்கைச் சமூகத்தில் அனுசரணை அரசியல் என்பது இயற்கையானது என்ற பொதுவான உணர்வு இருந்தபோதிலும், சிங்கள பெரும்பான்மையினரின் மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பும் உத்திகளும் அவர்களின் ஆளும் உயரடுக்கங்களும் அப்பாவியாகத் தோன்றும் இடத்தில் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் உறவுமுறை அரசியல் என்றே நாம் விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

## கடிதங்கள்

### குப்பை கொட்டுவதால் அசௌகரியம்

நிந்தவூர்- காரைதீவு பிரதான வீதியில் அமையப்பெற்றுள்ள பேருந்து தரிப்பிடத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு துர்நாற்றம் வீசுவதாகப் பயணிகள் மற்றும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மழைக்காலங்களில் குப்பைகள் நீரினால் அடித்துச் செல்லப்படுவதாலும் கட்டாக்காலி நாய்கள் மற்றும் கால்நடைகள் குப்பைகளை வீதியில் இழுத்துப் போடுவதாலும் பாதைகளில் பயணிக்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

பேருந்து பயணிகள் தரிக்கும் இடத்திற்கு உள்புறமாவும் குப்பைகள் காணப்படுவதாலும் துர்நாற்றம் வீசுவதாலும் பயணிகளால் அந்த இடத்தில் தரிக்காமல் சற்று தள்ளி நின்றே பேருந்துகளில் பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- அஸ்ஹர் இப்றாஹிம்






# பங்களாதேஷ் செயற்பாடுகளுக்கு 'AAA' கடன் மதிப்பீடு

இலங்கையின் கொமர்ஷல் வங்கியின் பங்களாதேஷ் செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட பங்களாதேஷ் கொமர்ஷல் வங்கி, கடன் மதிப்பீடு தகவல் மற்றும் சேவைகள் நிறுவனத்திடமிருந்து [Credit Rating Information and Services Ltd (CRISL)] தொடர்ச்சியாக 14ஆவது வருடமாக 2024ஆம் ஆண்டிற்கான 'AAA' (Triple A) நீண்ட கால கடன் மதிப்பீட்டைப் பெற்றுள்ளது. பங்களாதேஷில் உள்ள நிதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த கடன் மதிப்பீட்டைப் பெற்றுள்ளது.

ஜூன் 2025ஆம் ஆண்டு வரை செல்லுபடியாகும், சமீபத்திய கடன் மதிப்பீடானது தொடர்புடைய அளவு மற்றும் தரமான காரணிகளுடன் வங்கியின் செயல்பாடு மற்றும் நிதிபெறுபேறுகள் தொடர்பான ஆய்வின் விளைவாகும் என வங்கி தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ், கொமர்ஷல் வங்கியின் இந்தச் சாதனைக்கு வாழ்த்துத் தெரிவித்து, கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்றதிகாரி சனத் மனதுங்க கூறுகையில், 'AAA' (Triple A) தரவரிசையை தொடர்ச்சியாக 14 வருடங்களாகப் பெறுவது பங்களாதேஷில் உள்ள ஒரு வங்கிக்கு விதிவிலக்கான அரிய சாதனையாகும். இது சிறந்து விளங்குவதற்கான ஒருமித்த அர்ப்பணிப்பு, வாடிக்கையாளர்களுக்கான அர்ப்பணிப்பான சேவை மற்றும் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள தலைமைக் குழு மற்றும் ஊழியர்களின் இணையற்ற சேவைத் தரங்களை வெளிப்படுத்துகிறது. பங்களாதேஷ், கொமர்ஷல் வங்கியானது, கொமர்ஷல் வங்கி குழுமத்தின் பெரும் சொத்தாக திகழ்கிறது" என்றார்.

கொமர்ஷல் வங்கியின் பங்களாதேஷ் நடவடிக்கைகளின் பிரதம நிறைவேற்று அதிகாரி நஜித் மீவனகே தெரிவிக்கையில், "பங்களாதேஷில் எங்களது செயல்திறன் இலங்கை, கொமர்ஷல் வங்கியை போன்ற அதே நிபுணத்துவம், சிறந்த நடைமுறைகள் மற்றும் நல்லாட்சிக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றால் உந்தப்படுகிறது. டிஜிட்டல் வங்கிச் சேவைகள் உட்பட பெருநிறுவன மற்றும் சில்லறை வங்கியியல் ஆகிய இரண்டிலும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிக உயர்ந்த தரத்தை வழங்குவதை உறுதி செய்கிறோம். பங்களாதேஷில் ஒரு தரநிலை தாங்கியாக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், இது எங்களின் 'AAA' மதிப்பீட்டின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது" என்றார்.

# சர்வதேச தர நிர்ணய அமைப்பின் விசேட கூட்டம்



சர்வதேச தரநிர்ணய அமைப்பின் (ISO) தேயிலை குறித்த தொழில்நுட்பக் குழுவின் (ISO TC 34/ SC 8) 30ஆவது பொதுக்குழு கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் 10 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த தேசிய தரநிர்ணய அமைப்புகளைப் (NSBs) பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கூடிய BESPA-FOOD திட்டத்தின் ஆதரவுடன் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் (SLSI) இவ்விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதுமாத்திரமின்றி, ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் (UNIDO) ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டமானது, COVID-19 தொற்றுநோய்க்குப் பிறகு நடைபெறுகின்ற முதலாவது நேருக்கு நேர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகெங்கிலும் உள்ள உறுப்பு நாடுகளுக்கு தேயிலைத் துறையைச் சார்ந்த புதிய தர நிலைகள் மற்றும் ஆராய்ச்சி பற்றி விவாதிக்கவும், வளர்ச்சி முன்னேற்றத்திற்கு ஏற்ப இருக்கும் தரநிலைகளை மேம்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கின்ற ISO/TC 34/SC 8 கூட்டமானது அந்தந்த நாடுகளின் சந்தை போக்குகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்ப செயல்படவும் வாய்ப்பளிக்கிறது.

இதுதொடர்பில் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி சித்திகா ஜீ சேனரத்ன கருத்து தெரிவிக்கையில், "இந்த முக்கியமான கூட்டத்தை நடத்துவது இலங்கைக்கு கிடைத்த பெருமையாகும். இலங்கையில் தேயிலை உற்பத்தி துறையானது ISO தரநிலைகளுடன் முழுமையாக செயல்படுகின்றது. அதேபோல, தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் நிலையான தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு நாடாக நாம் ஒரு முக்கியமான பணியைச் செய்து வருகின்றோம்" என அவர் தெரிவித்தார்.

உலகளாவிய தேயிலை உற்பத்திக்கான பல்வேறு சர்வதேச சந்தை அளவுகோல்களைப் பற்றிய முக்கியமான விவாதங்களையும், மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக இம்முறை ISO கூட்டம் நடைபெற்றது. குறிப்பாக, தேயிலைத் (Camellia sinensis) துறையில் தர நிலைப்படுத்தல், பல்வேறு வகையான தேயிலைகளுக்கான தொகுப்பு தரநிலைகள், தரத்தை பரிசோதிக்கும் முறைமைகள் (உணர்வு மற்றும் கலவை உட்பட), சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (போக்குவரத்து உட்பட), சர்வதேச வர்த்தகத்திற்கு தேயிலை தரத்தில் தெளிவை வழங்குதல் மற்றும் தேயிலை தரத்தின் நுகர்வோரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல் ஆகியவை இதன்போது விவாதிக்கப்பட்டமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

அதுமாத்திரமின்றி, இரசாயனவியல் பகுப்பாய்வு மூலம் தேயிலையை வகைப்படுத்தும் முறையை அறிமுகப்படுத்துதல், வெள்ளை தேயிலையை தரப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல், பச்சை தேயிலைக்கான சொற்களை அறிமுகப்படுத்துதல், மசாலா சாய்தூளின் தன்மைகளை வரையறுத்தல் மற்றும் கறுப்பு தேயிலைக்கான சொல்லகராதியை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இம்முறை கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கிய சில தலைப்புகளாகும். அதேபோல, திடமான வடிவில் உடனடி தேநீருக்கான (Instant tea) தர நிலைகளை திருத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்நிகழ்வு குறித்து UNIDO வின் சிரேஷ்ட சர்வதேச தொழில்நுட்ப நிபுணர் கலாநிதி கயிரோ விலமில் டியஸ் கருத்து தெரிவிக்கையில், "இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் BESPA-FOOD திட்டத்தின் முக்கிய தூண்களில் விவசாய உணவுத் துறைக்கான சர்வதேச தரத்தை மேம்படுத்துவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் ஆதரவளிப்பது ஒன்றாகும். உள்ளூர் விவசாய-உணவு மதிப்புச் சங்கிலியை இலங்கையிலும், இலாபகரமான சந்தைகளை வெளிநாட்டிலும் அணுக இது உதவும்" என தெரிவித்தார்.

# ஆதிக்குடிகளின்...

மது ஜாடிகளில் மூழ்கி எழுந்த
உடலுடன் சாலையில் நடக்கிறேன்
ஊரின் அதிவுயர்
இராடர் கண்களில் படாமல்
தாழப்பறக்கவும் வேண்டும்...

பொது இடங்களில்
போதையில் நடந்த குற்றம்
இன்றும் பிடிபட்டால்
வழக்கு பதினைந்து ஆகிவிடும்...

சுட்டகோழியின்
தொடைச் சுவை நீங்காத
என் முன்னால் நீண்டு
கொண்டே போகிறது...
ஊறுகாய்க்கும் வக்கில்லை
கைகளை நக்கியபடி
நடந்துகொண்டேதான் இருக்கிறேன்...

போதை போதை போதை
எச்சில் துப்பவில்லை
தூசனங்களை உளறவில்லை
சாலை விதிகளை மீறவில்லை
நீண்ட தூரம் வந்துவிட்டேன்...

இடையிடையே
அரசியல் வாதிகள் முகங்களை தவிர
எந்த முகங்களும் எதிர்படவில்லை
அடடா
இது தேர்தல் காலம்...

- காரையன் கதன்



# மழைக்கால நிலவு

கூந்தலின் கருமையோ மேகத்தில் கரைந்தது
கூதல் காற்றும் இதமாய் தொட்டது
கொலுசின் ஒளியை மின்னல் எடுத்து
கோல மகளின் நெற்றியில் மிளிர்ந்தது...

வளையலின் சத்தமோமழைத் துளிபாடுது
வண்ணம் பூசிய வதனம் நனைந்நது
மண்ணை தழுவமனமும் குளிர்ந்தது
மஞ்சள் மேனிகொஞ்சம் பூத்தது...

மழை மதிகாணும் ஆசைகள் மேலிட
மேகதிரையில் மோகம் கொண்டேன்
விண்மீன் விளக்கை விடியலில் தந்து
விசும்பின் நிலவை வீதியில் கண்டேன்...

- சம்பூர் சமரன்







# சா வீடு

சவமெடுத்த அன்றிரவு
சாதிசனம் கலையாது
உறவு வழிசமைத்தெடுத்து
உணவு கொடுக்கும் கதைவேறு

வயது வந்தோர் வருவார்
வைகுந்தத்தை விரிப்பார்
வளைத்திருந்து படித்துக்
கடைசியில் வாழியென்று முடிப்பார்

விழுந்தடித்து ஓடி
வெள்ளாப்புக்குள் தேடி
பிழந்தறுத்து ஆக்கும்
பெரிய மீன் வாங்கி
முள்ளுச்சதை வேறாக
முழுமீனை வெட்டி
கொள்ளியடுப்பில் கொதிக்கும்
கூட்டு ஆணமென்று

கிளவல்லா வாங்கி வந்து
கீறிப் பிழந்து துண்டாக்கி
கிழங்கோடு முள்போட்டுச்
சொதியென்று வைத்துக்
குழம்பாக்க நாட்டுக்கோழி
குடும்பத்துள்ளே பிடித்து
விருந்தாகக் கொடுப்பார்கள்
விழுந்து விழுந்து உண்ணத்தான்

முப்பொத்தொன்று மட்டும்
முடியாது அலையல்
பக்கத்து வீட்டிலும்
இருக்காது அவியல்
ஒத்தக் கரத்தையிலே
செல்லும் சமையல்
பக்கத்தில் நடக்கவே
பசியடங்கும் அதன் சுவையில்...

முற்றத்திலே மூட்டுவார் தீனா
முழுயிரவும் பத்து மதுதானா
முன்னூற்றி நாலடிப்பார் வீறா
மூன்று வேளை கோப்பி வரும் சீரா...

மாலைக்குள்ளே வைப்பார்
வெளியே இளநீர்
மண்டைக்குள்ளே வைப்பார்
உள்ளே தண்ணீர்
வேளைக்குவேளை
விடும் உறவு கண்ணீர்
வேளை பார்த்துத் தரும்
பெண்கள் தேநீர்.

சொர்க்கத்தில் நிட்சயித்தது
சேரவுறவாய்
சொந்தமே ஆக்கிவிடும்
அதைக் கதையாய்
வெட்கத்தில் ஓடித் திரிவார் இருவரும்
சுதியாய்
விரும்பிற்றோம் என சேரும்
பின் அது திருமணமாய்...

மூன்றன்று வைப்பார்கள்
விடியச் சாமம்
முப்பத்தொன்றில் கொடுப்பார்
பெரியதானம்
எட்டன்று கொடுப்பார்கள் எளிய
தானம்
எல்லாவற்றுக்கும் வேறாய் இருக்கும்
சோமபானம்...

- நீலையூர் சுதா





# மறுப்பதற்கு இடமில்லை



ல.மயூரன்
BA.MA.Mphil[R]

(வியாழக்கிழமை தொடர்ச்சி...)

விலங்குகளின் செயல்பாட்டில் வளிமண்டல ஈரப்பதன் மிகப்பெரிய செல்வாக்கைச் செலுத்தும். அவற்றின், இனப்பெருக்க செயற்பாட்டில் மிகப்பெரிய அளவில் பங்குதாரராக இவ் வளிமண்டல ஈரப்பதம் காணப்படுகின்றது.

குறிப்பாக விலங்குகள் தம்முடைய இருப்பிடத்தைத் தெரிவு செய்யும் போதும், உணவைப் பெற்றுக் கொள்ளும் போதும், கூடுகளை அல்லது வாழ்விடங்களை அமைக்கும் போதும் அவை காலநிலை கூறுகளைக் கவனத்தில் கொண்டு செயல்படும். எடுத்துக்காட்டாகக் கரையான் புற்று அமைப்பது, தூக்கணாங்குருவி கூடு கட்டுதல் என்பவற்றைக் கூறலாம்.

முட்டைகள் மூலம் தமது சந்ததியினரை உருவாக்கும் உயிரினங்களின் செயல்பாட்டில் ஈரப்பதனின் பங்களிப்பு மிக முக்கியமானதாகக் காணப்படும் என்பதை முன்னைய கட்டுரைத் தொடர் ஊடாக அறிந்து கொண்டோம். முட்டைகளில் காணப்படும் நீர்த்தன்மை கரு வளர்ச்சிக்கு உதவிபுரிவதுடன். குஞ்சுகளின் வளர்ச்சி நிலைக்கும் ஆதார சக்தியாக அமைகின்றது. இவ்வாறே விலங்குகளின் உடல் தட்ப வெப்பநிலையையும் கட்டுப்படுத்தும் காரணியாக வளிமண்டல ஈரப்பதன் காணப்படுகின்றது. அவற்றின் வளர்ச்சி தன்மை என்பதும் அந்த விலங்குகளின் நீர் சமநிலையைப் பொறுத்து அமைகின்றது.

வளிமண்டல ஈரப்பதனில் ஏற்படும் பாதிப்பு அல்லது மாற்றம் விலங்குகளின் உடல் நீர் வெளியேற்றப்படுவதற்கும், பறவைகளின் முட்டைகளில் நீர்த்தன்மை இழக்கப் படுவதற்கும் காரணமாக அமைகின்றது. வெப்பநிலை சீர் செய்தல் (Thermoregulation) செயற்பாட்டின் ஊடாக உயிரினங்கள் உடல் வெப்பநிலையைச் சமப்படுத்திக் கொள்கின்றன. புறச்சூழலில் காணப்படுகின்ற ஈரப்பதன் உடல் வெப்பநிலையைச் சமப்படுத்துவதில் பாரியளவான செல்வாக்கு செலுத்தும். குறிப்பாக விலங்குகளின் தோல் பகுதி வெப்பநிலையைச் சமப்படுத்துவதில் முக்கிய கருவியாகக் காணப்படுகின்றது. ஈரப்பதன் அதிகரிக்கும் போது விலங்குகளின் தோல் பகுதி பூஞ்சை மற்றும் பக்டீரியாக்களின் தாக்கத்திற்கு உட்படும். ஈரப்பதன் குறைவடையும் பொழுது அவற்றின் தோல் பகுதிகள் விரிவடைந்து உலர்ந்து தோல் புண்களைத் தோற்றுவிக்கும். இவை காட்டு விலங்குகளிலும் பார்க்க மனிதர்களின் கட்டுப்பாட்டில் வளர்ச்சியடையும் அல்லது பராமரிக்கப்படும் கால்நடைகளில் அதிக தாக்கம் செலுத்தும்.

பூஞ்சைகளால் ஏற்படும் நோய்களாக தோலில் (RINGWORM) காணப்படும் உரோமங்கள் உதிர்வடைதல், வட்டவடிவான புண்கள் தோன்றுதல் என்பனவற்றை குறிப்பிடலாம். இந்நோய் வளிமண்டல ஈரலிப்பினால் வேகமாக வளர்ச்சியடையும். (Dermatophytosis) எனும் நோய் தாக்கத்தின் ஊடாக கால்நடைகள் தோல் அரிப்பு மற்றும் முடி உதிர்தல் நிகழ்வுகளுக்கு உட்படும். கால் அழுகுதல் (Footrot) இந்நோய் கால்நடைகளின் கால்களிலே முதல் தோன்றுகின்றது. ஆனால், அவை மிக வேகமாகப் பரவல் அடைந்து ஏனைய பகுதிகளுக்கு பரவலடையும். புண்கள் தோன்றும் (Abscesses) இந்நோய் சிறிய புண்களாகத் தோற்றம் பெற்றாலும் அவற்றின் தாக்கம் கால்நடைகளின் மரணத்திற்குக் காரணமாகிவிடும். இச்சிறிய புண்கள் ஊடாக பக்டீரியாக்கள் உள்நுழைந்து உடல் முழுவதும் பரவல் அடைந்து அவ்வுயிரினத்திற்கு மரணத்தைக் கொடுத்துவிடும். அதிகப்படியான ஈரப்பதன் இப் புண்களை ஆறவிடாது செயற்படும். தோல் சீழ் (Pyoderma) எனும் நோய் தாக்கம் தோலின் மீது ஏற்படுகின்ற பக்டீரியா தொற்றாகும். கொப்புளங்கள், மேல் தோல் வீக்கங்கள் போன்ற பாதிப்புகளைத் தோற்றுவிக்கும். நாள்பட்ட தோல் அழற்சி (Chronic Dermatitis) புறச்சூழல் ஈரப்பதனின் அளவைப்பொறுத்து இந்நோயின் தாக்கம் அதிகரிக்கும். விலங்குகளின் தோல் பகுதியில் ஈரப்பதன் நீண்டநேரமாகத் தாக்கம் புரியும் பொழுது சருமம் பாதிக்கப்பட்டு இந்நோயைத் தோற்றுவிக்கும். இவ்வாறு கால்நடை விலங்குகளுக்கு ஏற்படுகின்ற நோய்களினை கட்டுப்படுத்த இதமான காலநிலை காணப்படவேண்டும். இவ் இதமான காலநிலையை அடியோடு அழித்துவிட்டு தனக்கு ஒன்றும் தெரியாதவர் போல் இப்புவியை வெப்பமடையச் செய்து கொண்டு அதனைத் தடுப்பதாகக் கூறி வருடத்தின் ஒரு நாளை (ஏப்ரல் 22) புவி தினமாகக் கொண்டாடும் மனிதர்கள் நாமாகிவிட்டோம் என்பது கவலைக்குரிய விடயமே.

எவ்வாறு ஈரப்பதனில் ஏற்படும் மாற்றங்கள் கால்நடைகளின் வாழ்க்கை முறையைப் பாதிக்கின்றதோ அவ்வாறே காற்றின் வேக மாற்றங்களும் அவற்றைப் பாதிக்கின்றது. காற்றின் வேகம் அதிகரிப்பதால் விலங்குகளின் மேய்ச்சல் நிலம் நேரடியாகப் பாதிக்கப்படும். மேய்ச்சல் புல்வெளிகள் காற்றின் வேகத்தினால் சாய்ந்து நிலத்தோடு, விழுமாயின் அவை விலங்குகளின் மேய்ச்சல் நிலையை, திறனைக் குறைத்து விடும் இதனால் விலங்குகளின் உணவு செயற்பாடு பாதிக்கப்படும். அதேசமயம், காற்றின் அதிகரிப்பு உலர் தன்மையாகக் காணப்படும் போது மேய்ச்சல் புல் வெளிகளின் ஈரலிப்பு தன்மை குறைந்துவிடும். ஈராழிப்பு தன்மை குறைந்த புல்வெளிகள் மேய்ச்சலுக்கு ஏற்றதாக அமையாது அவை வறண்ட பயிர்களாகக் காட்சிதரும். இவ்வாறான உலர்ந்த புற்களையோ அல்லது மேய்ச்சல் உணவுகளையோ கால்நடைகள் உண்ணுபதற்கு அதிக ஆர்வம் காட்டாது. உலர்ந்த காற்று அல்லது ஈரலிப்பான காற்று நோய் தாக்கங்களைக் காவி செல்லும் தன்மை கொண்டவை. அவை பண்ணைகளில் வளர்க்கப்படும் மிக நெருக்கமான கால்நடைகளில் மிக வேகமாகத் தாக்கம் செலுத்தும். இதனால் அவற்றுக்கிடையே நோய் பரவல் என்பது மிகவும் வேகமாக நிகழும்.

கரையோர பகுதிகளை அண்மித்த பகுதிகளில் கால்நடை வளர்ப்பு அதிகமாக இடம்பெறுமாயின். அக்கால்நடைகள் எதிர்காலத்தில் இடம்பெயர வேண்டிய சூழல் உருவாகும். கடல் மட்ட அதிகரிப்பு கரையோர பகுதிகளை உள்வாங்கிக் கொள்வதினால், கால்நடை வளர்ப்புக்குரிய பண்ணைகளின் நிலப்பகுதி குறைவடைந்து செல்லும் . கரையோரப் பகுதிகளை அண்மித்த ஆறுகள் கால்வாய்கள் மற்றும் களப்புகள் என்பனவற்றில் காணப்படுகின்ற நன்னீர் தன்மை குறைவடைந்து உப்பு செறிவு அதிகரிக்க அவற்றைக் கால்நடைகள் உட்கொள்ளாமல் புறக்கணித்து விடும். அது மட்டுமன்றி அவற்றைப் பராமரிப்பதற்கான நீர் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாத சூழல் தோன்றிவிடும். ஆகவே, அவற்றிற்கான நன்னீரைப் பெற்றுக் கொள்வது பாரிய சவால் மிக்க விடயமாக மாற்றம் பெறும். எனவே, கால்நடை வளர்ப்பு அவற்றின் ஊடாக பெற்றுக் கொள்ளும் உணவுகள் எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படப் போகின்ற மாற்றங்கள் மற்றும் இயற்கையான அனர்த்த செயற்பாடுகளால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்படும். கால்நடைகளுக்கான உணவு, அவற்றின் இறைச்சியைப் பதப்படுத்தல், பால் உற்பத்திகளைப் பதப்படுத்தல், முட்டைகளைப் பதப்படுத்தல் என ஒவ்வொரு செயற்பாடும் சிரமமானதாகவும், அதிக முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியதாகவும் காணப்படும். உலகின் ஏழை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற இவ் உணவுப் பொருட்கள் அந்நாடுகளால் ஏற்றுக்கொள்ள முடியாத பெறுமதிகளைக் கொண்ட பொருட்களாக மாற்றம் பெறும். இதனால் மீண்டுமொரு உணவுத் தளம்பல் நிலைக்குக் கொண்டு செல்லும்.

ஏதோ ஒருவகையில் தமது நாளாந்த உணவில் கால்நடைகளின் இறைச்சி, பால் வெண்ணெய், முட்டை என சேர்த்துக்கொள்ளும் மனிதர்களுக்குக் காலநிலையின் தாக்கம் சவால் நிறைந்த விடயமாக மாற்றம் பெறும். அதனைத் தடுப்பதற்காகக் காலநிலை தன்மைக்கு ஏற்ப உயிரினங்களை அல்லது விலங்குகளை உருவாக்கும் போது அவற்றின் ஊடாக பெற்றுக் கொள்ளும் வெளியீடுகள் இரசாயன தன்மை நிறைந்தனவாக காணப்படும். அவை மனித உயிர்களுக்கு ஆரோக்கியமிக்க உணவாகக் காணப்படாது. பல்வேறுபட்ட நோய்களை ஏற்படுத்துவதற்குக் காரணமான உணவுகளாக அவை மாற்றம் பெறும். எனவே காலநிலை மாற்றம் என்பது காலத்திற்கு ஏற்ப மாற்றங்களைத் தரப்போகின்றது. அதில் மனிதகுலமும், புவியைச் சார்ந்த ஏனைய உயிரினங்களும் பாதிப்பிற்கு உள்ளாகப் போகின்றன என்பதை யாராலும் மறுப்பதற்கு இடமில்லை.

(முற்றும்)

## இந்தியாவின்











## 78ஆவது சுதந்திர தினம்...

இந்தியாவின் 78ஆவது சுதந்திர தினம் 2024 ஆகஸ்ட் 15ஆம் திகதி இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. கொழும்பில் நடைபெற்ற இக்கொண்டாட்டங்களின் பிரதான நிகழ்வு இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் நடைபெற்றிருந்தது. இந்தியத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்த உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் அணிவகுப்பு மரியாதையினையும் பார்வையிட்டிருந்தார்.





## பாகிஸ்தானின்













## 78ஆவது சுதந்திரத் தினம்...

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் சமூகத்தினருடன் இணைந்து பாகிஸ்தானை வலுவான, ஆற்றல்மிக்க, முற்போக்கான, சகிப்புத்தன்மை மற்றும் ஜனநாயக இஸ்லாமிய நலன்புரி நாடாக மாற்றுதல் என்றதொனிப்பொருளில் பாகிஸ்தானின் சுதந்திரத்தின் 78ஆவது ஆண்டு விழாவை புதன்கிழமை (14) கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகராலயத்தில் கொண்டாடியது.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) பாஹீம்உல்அஸீஸ் பாகிஸ்தான் தேசியகீதம் இசைக்கப்படும் வேளையில் பாகிஸ்தானின் தேசியக் கொடியை ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

டாக்கா

## திருட்டுப் பொருட்களை

# திரும்பப் பெறும் மாணவர்கள்



பங்களாதேஷ் பிரதமர் இல்லத்தில் திருடிச் செல்லப்பட்ட பொருட்களை மாணவர்கள் அமைப்பினர் திரும்ப பெறும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பங்களாதேஷில் விடுதலை போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு இடஒதுக்கீடு வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்களின் போராட்டம் என்ற பெயரில் பெரும் புரட்சி ஏற்பட்டது. இதனால், வங்கதேசத்தில் ஆட்சி கவிழ்ந்தது. பிரதமர் ஷேக் ஹசீனா, சொந்த நாட்டில் இருந்து வெளியேறி, இந்தியாவில் அடைக்கலம் புகுந்தார்.

அதன்பிறகு, ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, அந்நாட்டில், முகமது யூனுஸ் தலைமையிலான புதிய இடைக்கால அரசு அமைந்தது.

இதனிடையே, போராட்டக்காரர்கள் ஷேக் ஹசீனாவின் இல்லத்திற்குள் புகுந்து, அங்கிருந்து பொருட்களை எல்லாம் திருடிச் சென்றனர். ஷோபா, சேர், நகை, பணம் மற்றும் அவரது ஆடைகள் என அவரது மாளிகையே சூறையாடப்பட்டது. இது தொடர்பான காணொளி வெளியாகி உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

மாணவர்களின் விருப்பப்படி, ஷேக் ஹசீனா பதவியை இராஜினாமா செய்து விட்டதால், திருடிய பொருட்களை மீண்டும் கொண்டு வந்து வைக்குமாறு, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் சங்கம் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதனை, ஏற்று திருடு போன பொருட்கள் ஒவ்வொன்றாக, அரசு இல்லமான ஞானப பனுக்கு வந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில், திருடப்பட்ட பல பொருட்கள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. அதிலும் ஒருவர் எடுத்துச் சென்ற வாத்தை சமைத்து உண்டு விட்டதால், அதற்குரிய பணத்தை கொடுத்துள்ளார்.

ஆட்டோ ஓட்டுநர் ஒருவர் எடுத்துச் சென்ற சுமார் 75 ஆயிரம் ரூபாய் பணத்தையும் திரும்ப ஒப்படைத்துள்ளார். அதேபோல, நகைகள், வைர மூக்குத்தி உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்களும் திரும்ப வழங்கப்பட்டது.

கொல்கத்தா

## இளம் மருத்துவர் கொலையால்

# மருத்துவமனை நொருக்கப்பட்டது



மேற்கு வங்கத்தில் கொலை செய்யப்பட்ட பெண் மருத்துவர் பணிபுரிந்து வந்த அரசு மருத்துவமனையை ஏராளமானோர் சேர்ந்து அடித்து நொறுக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மேற்கு வங்க மாநிலம் தலைநகர் கொல்கத்தாவில் ஆர்.ஜி. கர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 8ஆம் திகதி இரவு பணியில் ஈடுபட்டிருந்த முதுநிலை மருத்துவ மாணவி ஒருவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

மாணவி கூட்டு பாலியல் வன்புணர்வு செய்து கொலை செய்யப்பட்டிருப்பதாக பெற்றோர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். மேலும், இந்த படுகொலையைக் கண்டித்து நாடு முழுவதும் மருத்துவர்கள் மற்றும் பொது மக்கள் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், போராட்டக்காரர்கள் மருத்துவமனையிலிருந்த பொருட்களை அடித்து சூறையாடினர். இதனால், அப்பகுதி போர்க்களம் போல காட்சியளித்தது. அவர்களை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டு வீசியதுடன், தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர்.

சென்னை

# மீண்டும் தீவிர அரசியலில் இறங்கியுள்ள நடிகை குஷ்பு



தேசிய மகளிர் மற்றும் குழந்தைகள் நல ஆணைய உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த நடிகை குஷ்பு, மீண்டும் தீவிர அரசியலில் இறங்கி விட்டதாக அறிவித்துள்ளார்.

நடிகையும், பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினருமான குஷ்பு, தேசிய மகளிர், குழந்தைகள் நல ஆணைய உறுப்பினராக கடந்த 2023ஆம் ஆண்டு பெப்ரவரி 27இல் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக கடந்த 14ஆம் திகதி திடீரென அறிவித்தார். அதற்கான கடிதத்தை துறை அதிகாரிக்கு அனுப்பியதாகவும், அவரது இராஜினாமா ஏற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து குஷ்பு தெரிவிக்கையில், "அரசியலில் 14 ஆண்டுகால சேவைக்குப் பிறகு, ஒரு இதயபூர்வமான மாற்றத்தை உணர்கிறேன். உயர்ந்த கட்சியாக விளங்கும் பா.ஜ.கவில் முழுமையாக செயல்படுவதற்காக தேசிய மகளிர் ஆணையத்திலிருந்து என் பதவியை இராஜினாமா செய்துவிட்டேன். என்னுடைய விஸ்வாசமும், நம்பிக்கையும் எப்போதும் பா.ஜ.க. உடன்தான் இருக்கும். தீவிர அரசியலில் ஈடுபட முடியாதபடி தேசிய மகளிர் ஆணையத்தில் அதற்கென சில கட்டுப்பாடுகள் இருந்தன" என்றார்.

ஒடிசா

# மாதவிடாய் விடுமுறை

மாதவிடாய் நாட்களில் பெண்களுக்கு ஊதியத்துடன் ஒருநாள் விடுப்பு வழங்கப்படும் என்று ஒடிசா அரசு அறிவித்துள்ளது.

ஒடிசாவின் கட்டாக்கில் நடைபெற்ற இந்தியாவின் 78ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் அம்மாநில துணை முதல்வர் பிராவதி பரிடா கலந்து கொண்ட நிலையில், மாதவிடாய் நாட்களில் பெண்களுக்கு ஊதியத்துடன் ஒருநாள் விடுப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளதுடன், இந்தத் திட்டம் உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் கூறியுள்ளார்.

மாநில அரசு பெண் ஊழியர்களுக்கு மட்டுமின்றி, தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களும், மாதவிடாய் நாட்களில் இந்த விடுப்பை எடுத்துக் கொள்ளலாம் என்றும் பெண்களின் உடல் ஆரோக்கிய நலனில் இந்தத் திட்டம் சிறப்பானதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இந்த மாதவிடாய் விடுப்பு அளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுப்பர் கிண்ணப் போட்டி:



# அத்லாண்டாவை வென்ற றியல் மட்ரிட்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சுப்பர் கிண்ணப் போட்டியில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் வென்றது.

போலந்தில் வியாழக்கிழமை(16) நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான அத்லாண்டாவுடனான இப்போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் றியல் மட்ரிட் வென்றது.

நடப்பு சம்பியன்ஸ் லீக் சம்பியனான மட்ரிட் சார்பாக பெடெரிக்கோ வல்வேர்டே, கிலியான் மப்பே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில் சம்பியன்ஸ் லீக் சம்பியன்களுக்கும், யூரோப்பா லீக் சம்பியன்களுக்குமிடையிலான சுப்பர் கிண்ணத்தை அதிக தடவைகள் வென்ற அணியாக றியல் மட்ரிட் மாறியது. மட்ரிட் ஆறு தடவைகள் வென்றுள்ள நிலையில், இன்னொரு லா லிகா கழகமான பார்சிலோனா, இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலன் ஆகியன ஐந்து தடவைகள் வென்றிருந்தன.



# வொஜெக் ஷிஸன்ஸ்கி விலகினார்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் கோல் காப்பாளரான வொஜெக் ஷிஸன்ஸ்கி கழகத்தை விட்டு வெளியேறியுள்ளதாக அக்கழகம் புதன்கிழமை (14) தெரிவித்துள்ளது.

இன்னும் ஓராண்டுள்ள தனது ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வர பொதுவாக இணங்கியதையடுத்தே ஜுவென்டஸிலிருந்து 34 வயதான ஷிஸன்ஸ்கி வெளியேறியுள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலிலிருந்து ஜுவென்டஸில் இணைந்து 252 போட்டிகளில் விளையாடியிருந்தார்.



## ஜூன் 2027 வரையான யுனைட்டெட் ஒப்பந்தத்தைக்

# கைச்சாத்திட்டது பெர்ணாண்டஸ்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் அணித்தலைவரான ப்ரூனோ பெர்ணாண்டஸ், யுனைட்டெட்டுடனான ஒப்பந்தத்தை மேலதிக ஆண்டுத் தெரிவுடன் கூடிய வகையில் 2027 ஜூன் மாதம் வரையில் நீடித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு யுனைட்டெட்டில் இணைந்த 29 வயதான பெர்ணாண்டஸின் 2022இல் கைச்சாத்திட்ட ஒப்பந்தமானது, 2026இல் முடிவடையவிருந்தது.

யுனைட்டெட்டுக்காகா 234 போட்டிகளில் 79 கோல்களைப் பெற்றுள்ள மத்தியகளவீரர் பெர்ணாண்டஸ், 67 தடவைகள் கோல்களைப் பெறுவதற்கு உதவியுள்ளார்.



## தங்கம் வென்ற

# பிருந்திகன் கௌரவிப்பு

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலை மல்யுத்த சங்கதால் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமான 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 97 கிலோ கிராம் எடைப்பிரிவில் பங்குபற்றி மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி மாணவன் பிருந்திகன் தங்கப் பதக்கம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்லூரியில் மிகவும் சிறப்பாக அண்மையில் நடைபெற்றது.



# பயிற்சியாளர் மோர்கல்

இந்திய ஆண்கள் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் மோர்னே மோர்கல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கெதிரான தொடரில் இந்தியாவின் பந்துவீச்சுப் பயிற்சியாளராகக் கடமையாற்றிய சாய்ராஜ் பதுகுலே தொடர்ந்தும் பயிற்சியாளர் குழாமில் இருப்பாரா என்பது தெளிவில்லாமலுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 16 ஆகஸ்ட் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.